**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2016**

**D041 மொழி வரலாறு –2**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. எழுத்துகளின் இரண்டு வகை உச்சரிப்புகள் யாவை?
2. எத்தனை வகையான சொல்லெழுத்துகள் உள்ளன? அவை யாவை?
3. எத்தனை வகையான வேற்றுமைகள் இக்கால எழுத்துத்தமிழில் வழக்கில் உள்ளன?
4. எழுத்துச் சீர்திருத்தம் என்றால் என்ன?
5. தொல்காப்பியர் குறிப்பிடும் வினாப்பெயர்கள் யாவை?
6. 'சொல்லுருபு' என்ற சொல்லாட்சியை முதன்முதலில் கையாண்ட நூல் யாது?
7. துணைவினை என்றால் என்ன?
8. ஆக்க வினையடை விகுதிகள் யாவை?
9. நன்னூலார் கூறும் மொழியின் வகைகளைக் குறிப்பிடுக.

10. தமிழில் வழங்கும் எதிரொலிச் சொற்களுக்குச் சான்றுகள் தருக.
11. 'குட்டி' என்ற சொல் எவ்வெவற்றின் இளமைப் பெயர்?
12. 'நுதல்' என்ற சொல்லினது பொருள் மாற்றம் அடைந்ததா? காரணம் கூறுக.
13. இதழ் குவியா முயற்சியால் பிறக்கும் உயிர் ஒலிகள் யாவை?
14. ஒலி மாற்றங்களின் இரு வேறு வகைகள் யாவை?
15. தமிழில் உள்ள கூட்டொலிகள் எத்தனை? அவை யாவை?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. பயன்படுத்துவோர் நோக்கில் எழுத்து எண்ணிக்கை எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது விளக்குக.
2. தமிழில் சொல்லெழுத்துகளின் வளர்ச்சி நிலைகளை விளக்கியுரைக்க.
3. பதிலிடு பெயர்கள் குறித்துச் சான்றுகளுடன் விவரிக்க.
4. பெயரடையின் வளர்ச்சி வரலாற்றை விளக்கி எழுதுக.
5. சொற்பொருள் விளக்கத்தையும் அதன் வகைப்பாடுகளையும் விளக்கியுரைக்க.
6. ஒரு பொருள் பல சொல் குறித்துச் சான்றுகளுடன் விளக்கியுரைக்க.
7. மெய் ஒலிகள் குறித்து விளக்கம் கூறி அதன் பாகுபாடுகளை எடுத்துரைக்க.
8. கிளைமொழிப் பாகுபாடுகள் குறித்து விவரித்துரைக்க.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) வரலாற்று நோக்கில் எழுத்துச் சீர்திருத்தத்தின் படிநிலைகளை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) புணர்ச்சி மாற்ற வரலாற்றினைச் சான்றுகளுடன் விளக்குக.

2. (அ) சொல்லுருபுகளின் வளர்ச்சி வரலாற்றினை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) துணை வினைகள் என்றால் என்ன? காலந்தோறும் துணை வினைகள் மாற்றம் பெற்ற வரலாற்றை விவரித்துரைக்க.

3. (அ) காலந்தோறும் சொற்பொருள் மாற்றம் நிகழ்ந்த வரலாற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) கூட்டொலிகள் குறித்து விரிவாக விளக்கியுரைக்க.